LIB... EASTERN UNIVERSITY, SRI ... 04 MAY ...

# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கல்விமாணித் தேர்வு 2011/2012

## EDS 3223 விசேட தேவைகள்சார் கல்வி (Special Needs Education)

நேரம் 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. அ. விசேட தேவைகள்சார் கல்வி என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக. (8 புள்ளிகள்)

   ஆ. கல்வித் துறையில் விசேட தேவைகள்சார் கல்வி பெறும் முக்கியத்துவத்தினை நான்கு உதாரணங்கள் காட்டி விளக்குக. (4x2=8 புள்ளிகள்)

   இ. விசேட தேவைகள் சார் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்துவதில் முறைசாராக் கல்வியை எவ்வாறு பயனுள்ளதாகப் பயன்படுத்தலாம் என்பதை ஐந்து உதாரணங்கள் மூலம் விளக்குக. (9 புள்ளிகள்)

2. அ. "மீத்திறன் கொண்ட பிள்ளைகள்" எனும் பதத்தினை நீர் எவ்வாறு வரையறை செய்வீர். (7 புள்ளிகள்)

   ஆ. மீத்திறன் கொண்ட பிள்ளைகளின் நடத்தைகளில் எத்தகைய வெளிப்பாடுகள் காணப்படும் என்பதை பொருத்தமான மூன்று உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (3x3=9 புள்ளிகள்)

   இ. மீத்திறன் கொண்ட பிள்ளைகளின் கற்றல்சார் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் கைக்கொள்ளத்தக்க ஐந்து உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக. (9 புள்ளிகள்)

3. அ. உள்ளடங்கல் கல்வி என்பதிலிருந்து நீர் யாது விளங்கிக் கொள்கின்றீர் எனக்குறிப்பிடுக. (7 புள்ளிகள்)

   ஆ. விசேட தேவைகளை உடைய பிள்ளைகளில் இருந்து விசேட சூழலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பதைக் குறிப்பிடுக. (9 புள்ளிகள்)

   இ. எதிர்வரும் தசாப்பதங்களுக்கான ஒரு பிள்ளையின் உரிமைகள் நிகழ்ச்சி நிரல் (2001) ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் விசேட அமர்வு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அவற்றில் இலங்கையில் பின்பற்றக் கூடிய பரிந்துரைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (9 புள்ளிகள்)

4. அ. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு(Community Based Rehabilitation- CBR) என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துக. (12 புள்ளிகள்)

ஆ. விசேட தேவைகளை உடைய பிள்ளைகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதில் பாடசாலைகளின் வகிபங்கு எத்தகையது என்பதைப் பொருத்தமான ஐந்து உதாரணங்களைக் காட்டி விளக்குக. (13 புள்ளிகள்)

5. அ. செவிப்புலக் குறைபாடுடைய பிள்ளைகள் கற்றல் தொடர்பில் எதிர்நோக்கத்தக்க பிரச்சினைகள் ஐந்தினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. நீர் ஒரு வகுப்பறை ஆசிரியர் என்ற வகையில் அவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கத்தக்க வழிகள் ஐந்தினைக் குறிப்பிட்டு பொருத்தமான உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (13 புள்ளிகள்)

6. அ. உள்ளடங்கல் கல்வி மூலம் எவ்வாறு "அனைவருக்கும் கல்வி" என்ற நோக்கு அடையப்படும் என்பதற்குப் பொருத்தமான ஐந்து காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு வினைத்திறனான கலைத்திட்ட இயைபாக்கங்கள் அவசியம். கற்பித்தல் சாதனங்கள் (Teaching Aids), கலைத்திட்டங்களது உள்ளடக்கம் (Curruculum content) எவ்வாறு இயைபுபடுத்தப்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துக.

(13 புள்ளிகள்)